<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 217/2021</u>
<u>வழக்கு சாட்சி DW–1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செய்யது முகமது அப்துல் காதர் ஷெரிப் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | வரிசைமுகமது | தொழில் | : | அரசு பணி (ஓய்வு) |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 83 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Thursday of 04.06.2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் தென்காசியில் குடியிருந்து வருகிறேன். நான் மின்சார வாரியத்தில் உதவி நிர்வாக அலுவலராக பணி செய்து ஓய்வு பெற்றேன். இந்த வழக்கில் நான் 5 வது எதிரியாக சேர்க்கப்பட்டுள்ளேன். நானும், என் மனைவி மட்டும் வாழ்ந்து வருகிறோம். 01.08.2017 அன்று சிறப்பு காவலர் எனது வீட்டிற்கு வந்து சுதந்திர தினம் வருவதினால் எல்லோருடைய துப்பாக்கியையும் ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது, அதனால் உங்களுடைய துப்பாக்கியையும் ஆய்வு செய்ய வேண்டும் என்று கூறினார். 1993 லிருந்து நான் லைசென்ஸ் 57/107 TKS, Gun No.3842 என்ற துப்பாக்கியை வைத்திருந்தேன்.

நான் திருநெல்வேலி, தூத்துக்குடி ரைபில் கிளப்பில் மெம்பராக இருந்து வந்து நிறைய போட்டிகளில் கலந்துள்ளேன். சிறப்பு காவலர் என்னிடம் துப்பாக்கியை கேட்டபோது, நான் அவரிடம் வேறு பல

துப்பாக்கிகள் இருந்ததினால் என்னுடைய ஆம்னி வாகனமான TN–67–Z–6828–த்தை அந்த காவலரிடம் கொடுத்து துப்பாக்கியும் கொடுத்தேன். அந்த சிறப்பு காவலர் நிறைய துப்பாக்கிகள் இருந்ததினால் பைக்கில் கொண்டு போக முடியாது என்று என்னுடைய ஆம்னி வேனை கேட்டார். அதனால் கொடுத்தேன்.

மறுநாள் என்னுடைய லைசென்ஸை கொண்டு சென்று காவல்நிலையத்திலிருந்து என்னுடைய துப்பாக்கியையும், காரையும் கேட்டபோது அதை அச்சன்புதூர் காவல்நிலைய ஆய்வாளர் மீனாட்சிநாதன் என்பவரிடம் ஒப்படைத்து விட்டதாக என்னிடம் கூறினார். நான் அச்சன்புதூர் காவல்நிலையம் சென்று, அங்கு விசாரிக்கும் போது மீனாட்சிநாதன் இன்ஸ்பெக்டர் பணிமாறுதலாகி சென்று விட்டார் என்றும், என்னுடைய துப்பாக்கி குற்ற எண்.234/2017 வழக்கில் நீதிமன்றத்தில் ஒப்படைத்து விட்டதாக என்னிடம் கூறினார்கள்.

பின்னர் அந்த துப்பாக்கி தடயவியல் துறைக்கு போய்விட்டதாக சொன்னார்கள். 16.12.2017 ல் ஒரு மனு அச்சன்புதூர் காவல்நிலையத்தில் கொடுத்தேன். பின்னர் மீண்டும் தவறுகள் திருத்தி ஒரு மனு கொடுத்தேன். அதற்கு எந்த பதிலும் தரவில்லை. 05.02.2018 ல் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தேன். அதன் அடிப்படையில் தென்காசி டீஎஸ்பி 23.02.2018 ல் என்னையும், எனது மனைவியையும், என்னுடன் இருந்த நபர்களையும் விசாரித்தார்கள். அதன் பின் எந்த பதிலும் இல்லை. என்னுடைய காரையும், துப்பாக்கியையும் இந்த வழக்கில் சேர்த்து என் மீது பொய்யாக இந்த வழக்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

துப்பாக்கி லைசென்ஸ் ரினிவெல் செய்யும் விபரம் எனக்கு தெரியும். 1993 ம் ஆண்டு முதல் 2017 ம் ஆண்டு வரை நான் துப்பாக்கியை பலமுறை ரினிவெல் செய்துள்ளேன் என்றால் சரிதான். துப்பாக்கியை ரினிவெல் செய்ய கடைபிடிக்க வேண்டிய விபரம் எனக்கு தெரியும். ஒவ்வொரு தடவையும் துப்பாக்கி லைசென்ஸ ரினிவ் செய்வதற்கு என்னுடைய காரையும், துப்பாக்கியையும் போலீசாரிடம் கொடுப்பேனா? என்றால் இல்லை. எப்பொழுதும் என்னுடைய ஓம்னி காரை நான் கொடுத்ததில்லை என்றால் வழக்கமாக கேட்க மாட்டார்கள்.

பைக்கில் நிறைய துப்பாக்கிகள் வைத்து கொண்டு செல்ல முடியும் என்றால் சரியல்ல. 2 துப்பாக்கிகள் கொண்டு செல்லலாம். என்னுடைய துப்பாக்கி அடிக்கடி பழுதடைந்துள்ளதா? என்றால் எப்போதாவது பழுதடைந்துள்ளது. அவ்வாறு ரிப்பேரானால் மதுரையில் உள்ள அங்கீகாரம் பெற்ற நபரிடம் சரி செய்ய வேண்டும். என்னை இந்த வழக்கிலிருந்து நீக்கரவு செய்ய மனு எந்த நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யவில்லை.

போலீசாருக்கு கொடுத்த அறிவிப்புகள், மனுக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா? என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. டீஎஸ்பி விசாரித்த மனு கோப்புகள் என்னிடம் இல்லை. என்னுடைய துப்பாக்கி மற்றும் ஆம்னி காரை சட்ட விரோதமான செயல்களுக்கு பயன்படுத்தினேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.06 15:27:15 +0530

இல்லை.